## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 5-5 - எங்ஙனேயோ[1]
## (உருவெளிப்பாடு கண்ட தலைவி தாயை மறுத்துரைத்தல்)

3161 * எங்ஙனேயோ அன்னைமீர்காள்! * என்னை முனிவது நீர்? *
நங்கள் கோலத் திருக்குறுங்குடி நம்பியை * நான் கண்ட பின் **
சங்கினோடும் நேமியோடும் * தாமரைக் கண்களோடும் *
செங்கனி வாய் ஒன்றினோடும் * செல்கின்றது என் நெஞ்சமே 1

3162 என் நெஞ்சினால் நோக்கிக் காணீர் * என்னை முனியாதே *
தென்னன் சோலைத் திருக்குறுங்குடி நம்பியை * நான் கண்ட பின் **
மின்னு நூலும் குண்டலமும் * மார்வில் திருமறுவும் *
மன்னு பூணும் நான்கு தோளும் * வந்தெங்கும் நின்றிடுமே 2

3163 நின்றிடும் திசைக்கும் நையும் என்று * அன்னையரும் முனிதிர் *
குன்ற மாடத் திருக்குறுங்குடி நம்பியை * நான் கண்ட பின் **
வென்றி வில்லும் தண்டும் வாளும் * சக்கரமும் சங்கமும் *
நின்று தோன்றிக் கண்ணுள் நீங்கா * நெஞ்சுள்ளும் நீங்காவே 3

3164 நீங்க நில்லாக் கண்ண நீர்கள் என்று * அன்னையரும் முனிதிர் *
தேன்கொள் சோலைத் திருக்குறுங்குடி நம்பியை * நான் கண்ட பின் **
பூந்தண் மாலைத் தண்துழாயும் * பொன் முடியும் வடிவும் *
பாங்கு தோன்றும் பட்டும் நாணும் * பாவியேன் பக்கத்தவே 4

3165 பக்கம் நோக்கி நிற்கும் நையும் என்று * அன்னையரும் முனிதிர் *
தக்க கீர்த்திக் திருக்குறுங்குடி நம்பியை * நான் கண்ட பின் **
தொக்க சோதித் தொண்டை வாயும் * நீண்ட புருவங்களும் *
தக்க தாமரைக் கண்ணும் * பாவியேன் ஆவியின் மேலனவே 5

3166 மேலும் வன் பழி நங்குடிக்கு இவள் என்று * அன்னை காண கொடாள் *
சோலை சூழ் தண் திருக்குறுங்குடி நம்பியை * நான் கண்ட பின் **
கோல நீள் கொடி மூக்கும் * தாமரைக் கண்ணும் கனி வாயும் *
நீல மேனியும் நான்கு தோளும் * என் நெஞ்சம் நிறைந்தனவே 6

3167 நிறைந்த வன் பழி நங்குடிக்கு இவள் என்று * அன்னை காண கொடாள் *
சிறந்த கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை * நான் கண்ட பின் **
நிறைந்த சோதி வெள்ளம் சூழ்ந்த * நீண்ட பொன் மேனியொடும் *
நிறைந்து என்னுள்ளே நின்றொழிந்தான் * நேமியங் கையுளதே 7

3168 கையுள் நன் முகம் வைக்கும் நையும் என்று * அன்னையரும் முனிதிர் *
மைகொள் மாடத் திருக்குறுங்குடி நம்பியை * நான் கண்ட பின் **

[1] இது சில தேசங்களில் கோவில் திருவாய்மொழி

செய்ய தாமரைக் கண்ணும் அல்குலும் * சிற்றிடையும் வடிவும் *
மொய்ய[2] நீள் குழல் தாழ்ந்த தோள்களும் * பாவியேன் முன் நிற்குமே 8

3169 முன் நின்றாய் என்று தோழிமார்களும் * அன்னையரும் முனிதிர் *
மன்னு மாடத் திருக்குறுங்குடி நம்பியை * நான் கண்ட பின் **
சென்னி நீள் முடி ஆதியாய * உலப்பில் அணிகலத்தன் *
கன்னல் பால் அமுதாகி வந்து * என் நெஞ்சம் கழியானே 9

3170 கழிய மிக்கதோர் காதலள் இவள் என்று * அன்னை காண கொடாள் *
வழுவில் கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை * நான் கண்ட பின் **
குழுமித் தேவர் குழாங்கள் * கை தொழச் சோதி வெள்ளத்தின் உள்ளே *
எழுவதோர் உரு என் நெஞ்சுள் எழும் * ஆர்க்கும் அறிவரிதே 10

3171 * அறிவரிய பிரானை * ஆழியங் கையனையே அலற்றி *
நறிய நல்மலர் நாடி * நன்குருகூர்ச் சடகோபன் சொன்ன **
குறிகொள் ஆயிரத்துள் இவை பத்தும் * திருக்குறுங்குடி அதன் மேல் *
அறியக் கற்று வல்லார் வைட்ணவர் * ஆழ்கடல் ஞாலத்துள்ளே 11

**அடிவரவு:** எங்ஙனே என் நின்றிடும் நீங்க பக்கம் மேலும் நிறைந்த கையுள் முன் கழிய அறிவரிய கடல்

[2] மெய்கொள்